உ
கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி. ருகூ Vol. 59	திருவள்ளுவர் ஆண்டு 1994 சோபகிருது — ஆடி 1963 — July	பகுதி. ச No. 4

மார்க்கண்டேயனார்

பேராசிரியர் பாலூர் கண்ணப்ப முதலியார் எம். ஏ., பி. ஓ. எல்.
புதுக்கல்லூரி, சென்னை-14

[தொகுதி 59, பகுதி 2, 42ஆம் பக்கத்தொடர்ச்சி]

ஒளியோன் காஞ்சி என்பது, ஒளியோனாகிய திருமாலுக்கும் உண்டாகும் நிலையாமை ஆகும். 'திருமாலும் நிலையற்றவர்' என்பது அறிஞர் கூறும் கருத்தாகும். அப்பர் பெருமானார்,

நூறுகோடி பிரமர்கள் நங்கினார்
ஆறுகோடி நாராயணர் அங்ஙனே'

என்று ஆய்ந்து கூறிய மொழிகளைக் காண்க.

திருமால் தேவர்களில் சிறந்தவர். திருமால் தேவர்களில் சிறந்தவர் என்ற காரணத்தினால்தான் சூரபதுமன் எல்லாத் தேவர்களும் இன்னின்ன பணிகளைத் தன்பொருட்டுச் செய்ய வேண்டும் என்று பணித்தவன், திருமாலுக்கு மட்டும் அவரது பெருமையினையும் தகுதியினையும் கருதி,

களித்திடும் ஞிமிறும் வண்டும் கலந்திட நறவம்பொங்கித்
துளித்திடும் துழாய்மால் தன்னைச் சூரனும் அவுணன் பாரா
அளித்தவன் தன்மு தாதை ஆயின அதனால் நின்னை
விளித்திடும் எல்லை தோறும் விரைந்திவண் மேவு கென்றான்

என்று கந்தபுராணப் பாடலால் அறியலாம். இத்தகைய சீரியோனுக்கும் அழிவுண்டு என்ற உண்மையினையே ''ஒளியோன் காஞ்சி எளிதினில் கூறின்'' எனப்பட்டது. ஆகவே திருமாலின் நிலையாமையையினைக் காட்டி, ஏனையவர்களும் நிலையில்லாதவர்களே என்பதை விளக்கியவாறும், நன்னூலில் 'ஒருமொழி ஒழிதன் இனம்கொணற் குரித்தே' என வரும் நூற்பாவை விளக்கி உதாரணங் காட்டிய இடத்தில் "நஞ்சுண்டான் சாவான், என்றவாறு நஞ்சுண்டான் சாவான், 'நஞ்சுண்டது சாமி' என்பனவும்'' என்று கூறப் பட்டதை விதியாகக்கொள்ளும்போது, ''ஒள்ளியோன் காஞ்சி என்னும் தொடர் ஏனையோரின் காஞ்சியையும் உணர்த்தியவாறு கொள்க. ஆகவேதான்

இம்மை இல்லை மறுமை இல்லை
நன்மை இல்லைத் தீமை இல்லை
செய்வோர் இல்லை செய்பொருள் இல்லை

என்று அரிதியிட்டு உறுதியாகக் கூறினர் எல்லாம் அழிந்த போது அழியாமல் இருப்பவர் அம்மை அப்பர், இதனைக் கலித்தொகை

படுபறை பல இயம்பப் பலஉருவம் பெயர்த்து நீ
கொடுகொட்டி ஆடுங்கால் கோடுயர் அகல்அல்குல்
கொடிபுரை நுசுப்பினாள் கொண்டசீர் தருவாளோ
வண்டரற்றும் கந்தலாள் வளர்தூக்குத் தருவாளோ?
முலைஅணிந்த முறுவலாள் முன்பாணி தருவாளோ?

என்று கூறுதல் காண்க. இங்கு, 'கொண்ட சீர் தருவாளோ, வளர்தூக்குத் தருவாளோ, முன்பாணி தருவாளோ என்ற தொடர்கட்குப் பொருள் கண்ட நச்சினார்க் கினியார் ''தாளனம் முடிந்துவிடும் காலத்தினைத் தன்னிடத்தே கொண்ட சீரைத்தருவாளோ? ஆண்டுப் பிறர் இல்லையே'' என்றும் அதனிடை நிகழும்காலத்து அதனை

யுடைய தூக்கைத்தருவாள்? ஆண்டும்பிறர் இல்லையே!'' என்றும் ஒருதாளத்தின் முதல் எடுக்கும் காலத்தினையுடைய பாணியைத் தருவாள்? ஆண்டும் பிறர் இல்லையே! என்றும் முறையே கூறிவிளக்கியருளக் காண்க. பிறர் இல்லையே என்றுதல் கருத்து. இறைவனும் இறைவியும் தவிர்த்து யாவரும் நிலயற்றுப் போயினர் என்பதாம், இந்த அரிய பெரிய உண்மையினை யார் அறிவார் உலகின் நிலையாமை யினை அறிந்த தெளிந்த மெய் அறிஞர்களே அறியமுடியும். ஏனையோர் அறிதல் அருமை. எனவேதான் அறிவோர் யார் அஃது இறுவுழி இறுகென எனப்பாடினர்.

இவ்வாறு இந் நிலையாமைக் கருத்தையுடைய மேலே காட்டிய இரு செய்யுட்களையும் பாடியவர் ஒருபுலவரே, அவரே மார்க்கண்டேயனார். அம் மார்க்கண்டேயனார் வட நாட்டினின்றும்தென்னாடும் போந்த மார்க்கண்டேய முனி வரே. அம் மார்க்கண்டேயமுனிவர் காலங்கடந்த முனிவர், காலனைக்காய்ந்துசென்ற திருமூவர்க்கும் முற்பட்டவர்.

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு

என்ற திருவள்ளுவருக்கும் முற்பட்டவர். பாரதப்போர் குறிப்பும், வான்மீகியார்போன்றார், பாடலும் காணப்படு தலாலும் இத்தகையவர் பாடல் புறநானூற்றில் இருப்பதா லும். புறநானூற்றின் பழமைஇனிது புலப்படுகிறது.தமிழ் மொழியின் தொன்மையும் நன்கு தெரியவருகிறது.

சதுமறைஆ ரியம்வருமுன் சகமுழுதும் நினதாயின்
முதுமொழிநீ அநாதிஎன மொழிகுவதும் வியப்பாமே

என்பது உண்மைதானே.

இவ்வாறு தொன்மை வாய்ந்த தமிழ்மொழியால் அமைந்த பாடல்களைக் கொண்ட புறநானூறு ஆகிய பழம்பெரும் நூலைநாம் பெற்றது குறித்துப் பெருமிதம் கொள்ளவேண்டாவா?

மதுரைக் காண்டமும் மன்னவன் சிறப்பும்

பண்டித வித்துவான், மு. உலகநாதன்
விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை-1.

[பகுதி 2, 62-ஆம் பக்கத்தொடர்ச்சி]

புறஞ்சேரியிறுத்த காதையிலே பாண்டிய மன்னனைப் பலவாறு சிறப்பித்த இளங்கோவடிகள் அதற்கு அடுத்த காதையாகிய ஊர்காண் காதையிலும் மன்னனையும் மதுரையையும் சிறப்பிக்கத் தவறவில்லை. மன்னவன் கூடலாகிய மதுரையம்பதி காலைவேளையில் எவ்வாறு காட்சியளிக்கிறது என்பதைக் காட்ட எண்ணுகிறார்.

கீழைத் திசையில் கதிரவன் தன்னுடைய கதிர்களைப் பரப்புகின்றான். பொய்கையிலே உள்ள தாமரை மலர்கள் அவனது வருகையால் கட்டவிழ்கின்றன. பூம்பொழில் உள்ளனவும், பிறங்கு நீர்ப்பண்ணையில் உள்ளனவும் ஆகிய புள்ளினங்கள் துயிலெழுந்து ஆர்க்கின்றன. பல்வேறு வகையான கோட்டங்களில் இருந்தும், பள்ளிகளில் இருந்தும், பாண்டிய மன்னனது அரண்மனையில் இருந்தும் சங்கினொலியோடு கூடிய காலை முரசம் ஒலிகூட்டுகிறது. இதுதான் அங்கு சொல்லவேண்டிய காட்சி. ஆனால் இளங்கோவடிகள் அத்தோடு தன்னுடைய எண்ணத்தையும் ஏடேற்றிக்கொள்கிறார். பாண்டியமன்னனைப் புகழ்ந்து கூறும் அவரது நெஞ்சம் அவனை இவ்விடத்திலும் மறந்துவிட வில்லை. அவருடைய புகழ்ச்சிக்குத் தக்கவாறு காலைக்கதிரவனும் உதிக்கின்றான். எவ்வாறு........?

"புலரி வைகறைப் பொய்கைத் தாமரை
மலர்போதி அவிழ்த்த உலகுதொழு மண்டிலம்
வேந்துதலை பனிப்ப ஏந்துவாட் செழியன்
ஓங்குயர் கூடல் ஊர்துயில் எடுப்ப"

(ஊர்காண் 3-6)

இதுதான் வரிகள். இதனை எவ்வாறு பொருள் கொள்வது? மலரின் முகையினை அவிழ்க்கின்ற கதிரவன் உலகத்தாரால் தொழப்படுபவன். அவன் மதுரையின் கண்தோன்றி உறங்குகின்ற மக்களைத் துயில் நீக்குகிறான். ஏன்?

பாண்டியன் எப்படிப்பட்டவன்? அவனுடைய கூடல் எப்படிப்பட்டது? அவனுடைய கையில் வெற்றியினைத் தேடித்தரும் வாளொன்றினை ஏந்தியிருக்கிறான். எனவே பகையரசர்களுடைய தலைகள் அதனைக் கண்டவுடன் நடுங்குகின்றன. வேந்து தலைபனிக்கும் ஏந்துவாள் உடைமையினாலே கதிரவனும் வீரத்தான் மேம்பட்டு வண்மையால் உயர்ந்திருக்கின்ற ஓங்குயர் கூடலின் கண்வந்து ஊர் துயில் எழுப்புவதைத் தினமும் தன் கடமையாகக் கொண்டிருக்கிறான் என்று எண்ணுவதற்கு இடமளித்து இளங்கோவடிகள் மேலே காட்டிய வரிகளினை எழுதியிருக்கிறார். இதில் இருந்து அவர் பாண்டிய மன்னனுக்குப் பரிந்து நிற்கும் பண்பினர் என்பதை ஊகித்தறியலாம்.

பூம்புகார்; மதுரை, வஞ்சி இவற்றிற்கு ஒப்பானதோர் ஊர். அதனை ஒரு சிற்றூர் என்று சொல்லிவிடுவதற்கு இல்லை. அங்கே வாழ்ந்த கோவலன் அவ்வூரின் இயல்பினை அறியாதவன் அல்ல, அவ்வாறு பெரியதொரு நகரின்கண் வாழ்ந்து வந்த கோவலனே மதுரை வந்தவுடன் அதனைக் கண்டு மலைக்கின்றான்.

"நறமலர் மேனி நடுங்குதுயர் எய்த
அறியாத் தேயித்து ஆரிடை உழந்து
சிறுமை யுற்றேன்"

(ஊர்காண் 17 - 20)

என்கின்ருன்.

மதுரையைக் கோவலன் வாயிலாக 'அறியாத்தேயம்' என்று கூற வைக்கிருர். கோவலன் எந்தவித விபரமும் தெறியாத சிறுபிள்ளை அல்ல மதுரையைக் கண்டவுடன் அஞ்சி நடுங்குதற்கு. ஏனென்ருல் அவன் அதற்கொப்பான புகாரிலே வாழ்ந்திருக்கிருன். இருப்பினும் கோவலன் இவ்வாறு கூறுவதனுல் என்ன உணர இடமேற்படுகிறது? மதுரையின் பரப்பும், விரிவும், தொன்மையும் புலப்படுகின்றதன்ருே?

மதுரையின் அமைப்பு

கோவலன் இவ்வாறு மனம்கலங்கிப் பிதற்றுகின்ருன். அதுகண்ட கவுந்தியடிகள் அவனைப்பலவாறு தேற்றுகின்ருர். கோவலன் வந்த வினை என்ன? அவன் சிலம்பை விலை கூறுதற்காக மதுரையின் உள்ளே செல்லவேண்டும். மனம் கலங்கிய அவனுக்கு வேண்டிய அறிவுரைகள் கவுந்தியடிகளிடம் இருந்து கிடைக்கிறது. அவன் 'அறியாத்தேயம்' என்று கலங்கியதற் கேற்பவே கவுந்தியடிகளும் வருந்தாது மன்னவனது கூடலை அடைந்து 'பொருந்துழியறிந்து' திரும்பிவா வென்று வழி அனுப்புகின்ருர். கவுந்தியடிகளினுடைய தேற்றுதலுக்குப்பின் கோவலன் புறப்படுகின்ருன். முதல் முதலாக அவன் வருகின்ற வீதி எத்தகையது என்று கூறப்படுகிறது. வெளியூரில் இருந்துவரும் யாரும் எளிதாக மதுரையினுள் நுழைந்துவிட முடியாது. அவ்வளவு கட்டுக்காவலினை மதுரை பெற்றிருக்கிறது. மன்ன

னது கோட்டை காவற்காடுகள் சூழ்ந்து, வளைவுபட்டுக் கிடக்கின்ற அகழிகளையும் அதிலே போக்குவரத்துக்காக அமைக்கப்பட்ட வழிகளும் அதனை அச்சத்தைத் தரும் யவனர்கள் காவல்காத்துக்கொண்டும் இருக்கின்றனர்.

கோவலன் அவ்வாறு காவல்காத்து நிற்பவருக்கு ஐயம் எழாதவாறு உள்ளே நுழைந்து விடுகிறான். இங்கே தான் ஆசிரியர் மதுரையின் அமைப்பினை மற்ற இரு காண்டங்களில் வஞ்சியையும் புகாரையும் சிறப்பிக்காத அளவிற்குச் சிறப்பித்துக்கூறுகிறார்.

மதுரையைச் சுற்றிலும் அதற்குப் பாதுகாப்பாக மதில்கள் எழுப்பப்பட்டுள்ளன. அக்காட்சி எவ்வாறு இருக்கிறது. ஆயிரங்கண்களையுடைய இந்திரனது பெறுதற்கரிய அணிகலன்களைப் பெய்துவைத்த பேழை ஒன்று வாய்திறந்து கிடப்பதுபோல மதில்களை உடைத்தாகி மற்றைய எழில் நலங்களையும் கொண்டு அதுகாட்சி அளிக்கிறது என்று வருணிக்கிறார்.

"ஆயிரங் கண்ணோன் அருங்கலச் செப்பு
வாய்திறந் தன்ன மதிலக வரைப்பில்"

(ஊர்காண் 68-69)

இது மதுரையைக் கோவலன் முதலில் காணுகின்ற போது உண்டாகின்ற தோற்றப் பொலிவு.

செல்வவளம்

அடுத்து அவன் காணுகின்ற காட்சிகள் அவனுக்குப் பழக்கமானதுதான். புகாரிலே அவன் நடத்தியதுதான். மேலேகண்ட மதிலின்மீது மேலைக்காற்று விசைத்துவந்து வீசுகிறது நகரத்திலே இருக்கின்ற கடைகழி மகளிர் தம் முடையகாதலஞ்செல்வர்களோடு இடையறாது நீரொழுகும் வையை ஆற்றின் மருதத்துறையிலே தோணிகளோட்டி

விளையாடிவரும் காட்சியும் நீரில் குதித்து நீந்தியும் தழுவி யும் நீராடியும் காலைப்பொழுதினைக் கழிக்கின்றனர்.

குளிர்ந்த முல்லை மலரும் குவளையும் நெய்தலும் ஆகிய பூக்களை கூந்தலில் நிறையச்சூடி வெண்பூ மல்லிகையின் பூக் களாகிய மாலையுடன் குளிர்ந்த செங்குவளை மலர்களின் தாதுகளைப்பிணைத்து அதனை கொற்கைத் துறையில் கிடைத்த பெரிய முத்தாற்செய்த வடத்துடன் பூண்டு தென்பொதிகைமலைக் கிடைத்த சந்தனத்தை உடல் முழுதும் பூசி அழகிய கொடிகளை உடையதாகிய மூதூர்க்கு அயலதாகிய சோலையிடத்து விளையாடும் விளையாட்டை விரும்பி அப்பொழுதுமளிர் நண்பகல்பொழுதைக் கழித்தனர்.

நண்பகல் கழிய மாலைக் காலம் வருகிறது. இளநிலா வின் பயனைத் துய்பதற்கென்றே போடப்பட்ட முற்றத்தில் தம்மை ஒப்பனை செய்துகொண்டு விரும்பப்படும் மலர் மஞ் சத்தில் இனிது அமர்ந்து முன்னர் புனலினும் பொழிலும் ஆடி இளைத்தகோலத்தைத் தம்முடைய காதலஞ் செல்வர் பாராட்டும் விதத்தில் மாலைக் காலத்தின் இன்பத்தின் பய னைத் துய்தனர்.

"குடகாற் றெறிந்து கொடிநுடங்கு மறுகின்
கடைகழி மகளிர் காதலஞ் செல்வரோடு
வருபுனல் வையை மருதோங்கு முன்றுறை
விரிபூந் துருத்தி வெண்மணல் அடைகரை
ஓங்குநீர் மாடமொடு நாவா யியக்கி
பூம்புணை தழீஇப் புனலாட் டமர்ந்து
தண்ணறு முல்லையும் தாழ்நீர்க் குவளையும்
கண்ணவிழ் நெய்தலும் கதுப்புற அடைச்சி
வெண்பூ மல்லிகை விரியலோடு தொடர்ந்த
தண்செங் கழுநீர் தாதவிரி பிணையல்

கோற்கையம் பெருந்துறை முத்தோடு பூண்டு
தெக்கண மலயச் செழுஞ்சே றுடிப்
பொற்கொடி மூதூர் பொழிலாட் டமர்ந்தாங்கு
எற்படு பொழுதின் இளநிலா முன்றில்
தாழ்தரு கோலம் தகைபா ராட்ட
வீழ்பூஞ் சேக்கை மேலினி திருந்தாங்கு''

(ஊர்காண் 70-84)

இவ்வாறு மதுரையின் கண் இருக்கின்ற பொதுமகளிரின் இயல்பை விளக்குவதோடு அடிகள் வேறுபல சிறப்பையும் கூறிவிடுகிறார். மதுரையின் பொய்யாக் குலக்கொடியாகிய நீர்வளத்தையும், நிலவளத்தையும், செல்வவளத்தையும், இயற்கை வளத்தையும் மிகத் தெளிவாகப் புலப்படுத்துகிறார். மதுரையினுள் நுழைந்த கோவலன் ஒரு பகற்போது முழுமையும் இத்தகைய கோலங்களையே கண்டு மகிழ்ந்திருக்கின்றான். கோவலனுக்கு இது புதிதல்ல. அவன் புகாரிலே 'நகர நம்பியர் திரிதரு மருங்கில்' இதுபோன்று சுற்றித்திரிந்தவன்தான். இருந்தாலும் அவன் மதுரையிலே காணும் காட்சி அவனை மெய் சிலிர்க்க வைக்கிறது. வியப்புக்கடலில் ஆழ்த்துகிறது. கண்ணகியை புறஞ்சேரியிலே விடுத்துவந்த கோவலன் காணும் முதற்காட்சி முழுமையும் பொதுமகளிர் அவர்தம் காதலஞ் செல்வரோடு கள்ளுண்டு களித்துக்கிடந்த காட்சியாகவே இருக்கிறது. இளங்கோவடிகள் கோவலனுக்கு மதுரையை முதலாகக் காட்டும்போது ஏன் இத்தகைய காட்சிகளைக் காட்டவேண்டும்? மதுரையைப் பற்றிய அறிமுகம் பொதுமகளிரோடு ஆரம்பமாவதா? அவன்தான் அத்தகைய நிலையினைத் துறந்து திருந்திய நிலையிலே சிலம்பினை அல்லவா விற்கவந்திருக்கின்றான்? மீண்டும் அவனது உள்ளத்திலே இத்தகைய காமக்கிளர்ச்சியைச் சொல்வது

அவனது உள்ளத்தின் நெகிழ்ச்சியைச் சோதனைசெய்வது போலல்லவா இருக்கிறது. கொண்டுவந்த சிலம்பினை எவளிடமாவது கொடுத்துவிட்டு மீண்டும் அவன் முன்புபோல் களிக்கூத்தில் இறங்கிவிட்டால் என்ன செய்வது? கோவலனோடு புறப்பட்டுவந்த கண்ணகியின் நிலை என்னவது? என்றெல்லாம் ஒருகணம் எண்ணத் தோன்றுகின்றது என்றாலும் இளங்கோவடிகளின் உள்ளம் எதுவாக இருந்திருக்க வேண்டும்?

அடிகளது உள்ளம் சந்தர்ப்பம் கிடைக்கின்றபோது மதுரையையும் மன்னவனையும் புகழ்ந்து கூறுவதாகத் தான் மதுரைக்காண்டம் முழுவதும் இருக்கக் காண்கின்றோம். கோவலன் மதுரையினுள் நுழைகின்றபோது புகாரிலே வாழ்ந்த கோவலனாக நுழையவில்லை. கண்ணகியின் கணவன் என்ற நிலையிலும், கைப்பிடித்த அவளோடு மீண்டும் செல்வவாழ்வு நடத்தவேண்டும் என்னும் உள்ளத்தோடும், இதற்கும் மேலாகக் கவுந்தியடிகளின் அருமையான அறிவுரையும்கூடிய கோவலனாகவே அவன் நுழைகிறான். நுழைகின்ற நோக்கமும் ஒரு வணிகநோக்கமாகவே இருக்கின்றது. இத்தகையசூழ்நிலையில் அவனது வணிகஉள்ளம் விலைபோகும் என்கின்ற நம்பிக்கை கோவலனது உள்ளத்தில்எழவேண்டும். புகாரிலிருந்துகிளம்பும்போது அவன் மதுரைக்குச்சென்றால் சிலம்பினைவிற்று முதலீட்டலாம்என்கின்ற எண்ணத்தோடு புறப்படுகிறான். எனவே கோவலன் நுழைகின்றபோதுமதுரையினதுசிறப்பையும்வளத்தையும் சொல்ல வேண்டும் என்று எண்ணுகின்றார். எனவேதான் பொதுமகளிரையும் அவரோடு கூடிக்களிக்கும் செல்வர்களையும் இளங்கோவடிகள் காட்டியிருக்கவேண்டும், எங்கே செல்வம்கொழிக்கிறதோ அங்கேதான்பரத்தையர்க்கூட்டம் அதிகம் இருக்கும் என்பது மருதத்திணைகாட்டும் இலக்கண விதி. ஆகவே இத்தகையதொரு காட்சியினை கோவலனுக்

குக் காட்டினால் கோவலனது மனம் நிச்சயம் தனது சிலம்புக்கு விலையுண்டு என்று அமைதிபெறும் என்கின்றநோக்குடனேயே இளங்கோவடிகள் மேற்கண்ட பொதுமகளிரின் களிமயக்கத்தைக் காட்டியிருக்கவேண்டும்.

மதுரையின் வளமை அனைத்தும் அதற்குள் சொல்லி முடிக்கப்படவில்லை. காலையிலும், நண்பகலிலும், மாலையிலும் என்று அறுவகைச் சிறுபொழுதில் ஒரு சில பொழுதுகளில் நடக்கும் காட்சிகளையே அடிகள் சொன்னார். இனிக் கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், வேனில் என்று சொல்லப்படுகின்ற ஆறு பெரும் பொழுதுகளிலும் அப்பொதுமகளிர் எவ்வாறு இன்பந் துய்த்திருக்க வேண்டும் என்பதையும், ஒவ்வொரு பருவத்தையும் அவர்கள் எவ்வாறு எதிர்நோக்கிக் கிடந்திருக்க வேண்டும் என்பதையும் ஓராண்டில் நிகழும் ஆறு பருவத்து நிகழ்ச்சிகளையும் கூடக் கற்பனை செய்து ஒரேநாளில் கோவலன் அதனைக் கண்ணுற்றது போலக் காட்டிவிடுகிறார். அந்த வரிகளிலே தான் பாண்டிய நாட்டின் சிறப்பினை மேலும் நம்மை உணரவைக்கிறார்.

கார்ப் பருவம்

காதலஞ் செல்வர்களோடு அக்கணிகைய மகளிர் வீழ்பூஞ் சேக்கையாகிய மலரமளிமேல் பூவேலைப்பாடுகள் அமைந்த செவ்விய பட்டினைத் தங்கள் இடுப்பினிலே உடுத்திக் கொத்துக் கொத்தாகவுள்ள வெட்பாலைப் பூவினை முடித்து சிறுமலை என்னும் மலையிற் பூத்த செங்கருந்தாளிப் பூவுடனே மணமிக்கக் குறிஞ்சிப் பூவினைச் சூடி குங்குமம் போலும் நிறமுடைய சந்தனத்தைக் கொங்கைகளிலே அப்பி செங்கொடுவேரியின் அழகிய பூவாற் கட்டப்பட்ட மாலையை சிவந்த சுண்ணம் அப்பிய மார்பிலே அழகிய

பவளவடமாகிய அணியுடன் பூண்டு தமக்கின்பம் விளைத்த பருவத்தை விரும்பிப் பூஞ்சேக்கையின் மீது கார் காலத்தின் வருகையை நோக்கி கார் கால அரசனும் வச்சிர வேந்தனு மான இந்திரனுக்குச் செவ்வணியினை ஆரவாரம் பொருந் திய கூடல் மாநகரத்தின்கண் காட்டி காதலஞ்செல்வரொடு கூடி மகிழ்ந்தனர்.

''வீழ்பூஞ் சேக்கை மேலினி திருந்தாங்கு
அரத்தப் பூம்பட் டரைமிசை யுடீஇக்
குரற்றலைக் கூந்தற் குடசம் பொருந்திச்
சிறுமலைச் சிலம்பிற் செங்கூ தாளமொடு
நறுமலர்க் குறிஞ்சி நாண்மலர் வேய்ந்து
குங்கும வருணம் கொங்கையி னிழைத்துச்
செங்கொடு வேரிச் செழும்பூம் பிணையல்
சிந்துரச் சுண்ணம் சேர்ந்த மேனியில்
அந்துகிர்க் கோவை அணியொடு பூண்டு
மலைச்சிற கரிந்த வச்சிர வேந்தர்க்குக்
கலிகெழு கூடல் செவ்வணி காட்டக்
காரர சாளன் வாடையொடு வருஉம்
கால மன்றியும்''

(ஊர்காண்: 86-97)

என்று காட்டுகின்றார். அக்கணிகைய மகளிர்க்கு கார்காலப் பூக்களான குடசம், குறிஞ்சி, கொடுவேரி யென்னுமிவை சிறுமலை என்னும் மலையில் இருந்து வந்துசேர்வதனையும் அவை எவ்வாறு அணியப்படுகின்றது என்கின்ற சிறப்பினை யும் அடிகள் கூறுகிறார்.

கூதிர்ப்பருவம்

கார்காலத்திற்கு அடுத்தாற்போல் கூதிர் காலம் வரு கிறது. கூதிர்காலமென்றால் குளிரோ தாங்கமுடியாது.

இருக்கின்ற கதவுகளையெல்லாம் அல்லவா இழுத்துமூட வேண்டும்? மதுரையின் மாடங்கள் எப்படிப்பட்டன? சிற்ப நூல் வல்லாராலே கட்டப் பெற்றவை. அதன்சிகரங்கள் மேகத்தைத் தொட்டுக்கொண்டிருக்கின்றன. பனிகொட்டு கிறது. எனவே அம்மாடங்களின் மூலைகளிலே கணப்புக் காக அகில் கட்டைகளைக்கொண்டு நெருப்பு மூட்டப்பட்டி ருக்கிறது. அங்குள்ள மடமகளிர் நறியசாந்தினைப்பூசிய அகன்ற மார்பினை உடைய நம்பியரொடு கூடித் தீக்காய்கின் றனர். மேலும் குளிர்கிறது. மாடங்களில் உள்ள குறியகண் களையுடைய சாளரங்களையும் இழுத்துமூடும்படியாக கூதிர் காலம் இருக்கிறது. இது முன்பு நிகழ்ந்தவை. அது மீண் டும் விரைந்துவாராதோ என்னும் விதத்திலே அம் மதுரை மாநகர் உள்ள மடமகளிர் காதற்கொழுநரைத் தழுவுகின்ற றனர்.

"..................நூலோர் சிறப்பின்
முகில்தோய் மாடத் தகில்தரு விறகின்
மடவிரல் மகளிர் தடவுநெருப் பமர்ந்து
நறுஞ்சாந் தகலத்து நம்பியர் தம்மோடு
குறுங்கண் அடைக்கும் கூதிர் காலையும்"

("ஊர்காண்: 97-101")

என மதுரையின் கூதிர்காலச் சிறப்புக்களை அடிகள் காட்டுகிறார். அடுத்து முன்பனிக்காலம் வருகிறது.

முன்பனி

செல்வமிக்க மனையிடத்து மகளிரும் மைந்தரும் இள நிலாவைத் துய்த்தற்பொருட்டு அதற்குறிய முற்றத்தின் கண் மாலைநேரத்து அமர்ந்து நுகரவும் விரிந்தகதிரை யுடைய ஞாயிறானவன் தெற்கேக வெண்முகில் அரிதாகத்

தோன்றும் இயற்கையழகுடைய முன்பனிக் காலத்தை எண்ணி இன்பந்துய்க்கின்றனர்.

> "விளமனை மகளிரும் மைந்தரும் விரும்பி
> இளநிலா முன்றிலின் இளவெயில்நுகர
> விரிகதிர் மண்டிலம் தெற்கேர்பு வெண்மழை
> அரிதில் தோன்றும் அச்சிரக் காலையும்"
>
> (ஊர்காண்: 103-106.)

என வருணிக்கப்படுகிறது.

பின்பனி

பின்பனி அடுத்து பின்பனிக்காலம் வருகிறது. கோமகன் கூடலில் வீசும் பின்பனிக் காலக் கீழ்க்காற்றானது எவ்வாறுவருகிறதுஎன்றுவிளக்கும்போது அடிகள் பாண்டிய மன்னனது வெற்றிச் சிறப்பைப் புகழத் தவறவில்லை. தொண்டி என்பது சோணாட்டுக் கடற்கரை உள்ளதோர் பதியாகும், அத்தொண்டியோரை இம்மன்னன் வெற்றிபெற்றமையினாலே அவ்வரசர்கள் திரையாக அனுப்பிய அகிலும், துகிலும், ஆரமும், வாசமும், கற்பூரமும் நாவாய்களிலே ஏற்றப்பட்டு மிகப்பெரிய கடலின்கண்ணே வருகிறது. அவ்வாறுவரும்பொருள்களின்மணத்தினை சுமந்து கொண்டு கீழ்காற்றானது கூடலின்கண்ணே புகுந்து காமனது கொடிய வில் வெற்றி பொருந்திய விழாவினைக் காணும் பங்குனித் திங்களின் அரசனாகிய பின்பனி எங்குங் குள்ளான் என்று கேட்கவும் அக்கணிகைய மகளிர் அப் பழமையை எண்ணி முயங்கினர்.

> "ஆங்க தன்றியும் ஓங்கிரும் பரப்பின்
> வங்க ஈட்டத்துத் தொண்டியோர் இட்ட
> அகிலும் துகிலும் ஆரமும் வாசமும்
> தொகுகருப் பூரமும் சுமந்துடன் வந்த
> கொண்டலோடு புகுந்து கோமகன் கூடல்
> வெங்கண் நெடுவேள் வில்விழாக் காணும்
> பங்குனி முயக்கத்துப் பனியர சியாண்டுளான்"
>
> (ஊர்காண் : 106 : 112)

என்று வருணிப்பதோடு அடுத்து இளவேனிலை எடுத்துக் கொள்கிறார்.

இளவேனில்

மாலை போலப் பூக்கும் குருக்கத்தியானது அழகிய கொடியை எடுக்கவும், இளமரக்காவும் நந்தவனமும் நறிய மலர்களைப் பூத்துக் குலுங்கவும் பாண்டியனது பொதிய மலைத் தென்றலோடு அம்மன்னவனது கூடலின்கண் புகுந்து தாம் விரும்புகின்ற துணைகளைத் தழுவுவிக்கும் இள வேனிலாகிய அரசன் யாண்டுள்ளான் என்று கூடி முயங்கி னர்.

> "கோதை மாதவி கொழுங்கொடி எடுப்ப
> காவும் கானமும் கடிமலர் ஏந்த
> தென்னவன் பொதியில் தென்றலொடு புகுந்து
> மன்னவன் கூடல் மகிழ்துணை தழூஉம்
> இன்னிள வேனில் யாண்டுளேன் என்று"
>
> (ஊர்காண் : 113-117)

என்று விளக்குகின்றார். அடுத்து வேனிற் பருவம் வரு கிறது.

முதுவேனில்

அதனில் அப்பொதுமகளிரின் எண்ணத்தைப் புலப் படுத்திவிடுகிறார். முதுவேனிலுக்கு அடுத்தாற்போல் மீண் டும் கார்ப்பருவம் தொடங்கிவிடுமாகையினால் அது விரைந்துவரல் வேண்டும் என்னும் உள்ளத்தினராய் பூங் கொடி போலும் உருவினை உடை அம்மகளிர் தம் கொழுந ரோடு பஞ்சணையில் இருந்துகொண்டு முன்பு தமக்கின்பம் பயந்த மேற்கண்ட பருவங்கள் மீட்டும் வருதலை விரும்பி அவை வரும் காலத்தை எண்ணும் உள்ளத்தினராய் அவ்

வருத்தம் நீக்கும் முதுவேனில் கூட்டத்தைக் கூடுகின்றார் கள். அடுத்து மீண்டும் வருவது கார்ப்பருவமன்றோ?

> "உருவக் கோடியோர் உடைப்பெரும் கொழுநரோடு
> பருவம் எண்ணும் படர்தீர் காலை"
>
> (ஊர்காண் : 118-119)

என்று மதுரை நகரின் பருவ வளத்தினையும் அவற்றினைச் செல்வரொடு கூடி இன்பம் துய்க்கும் மகளிரது செல்வ வளத்தினையும் ஒருங்கு காட்டுகிறார். இக்காட்சியினால் கோவலனது வணிக உள்ளம் மகிழ்ச்சியினால் திளைக்கும் என்பதே அடிகளது கருத்தாய் இருக்க வேண்டும். செல்வ வளமில்லாத ஊரிலே சென்று எவ்வாறு அவன் தன் மனை யின் காற்சிலம்பினை விலை கூற முடியும்?

மதுரைக்குச் சென்றால் சிலம்பினை விலைப்படுத்த முடி யும் என்கின்ற கருத்தோடு அவன் வருகிறான். மதுரையி னுள் நுழைகிறான். இத்தகைய சந்தர்ப்பத் திலேதான் அடிகள் மதுரையின் சிறப்பினைக் கூறவேண் டும் என்று எடுத்துக்கொண்டு தன்னால் முடிந்தமட்டும் அதனைச் சிறப்பித்துக் கூறிவிட்டார். இத்தகைய மதுரை பின்னால் அழிவது இரங்கத்தக்க ஒரு செய்தியாகத்தானே இலங்குகின்றது? இச்சிறப்புக்குக் காரணமான பாண்டி யன் பரிதாபத்துக்குரியவனாகத்தானே கருதப்படுகிறான்? இதைத்தான் அடிகள் விரும்பினார். எனவேதான் அவர் பாண்டியனுக்கும் அவனது நாட்டுக்கும் பரிந்துரைசெய்து செல்கிறாரேயன்றி அதற்கு வேறு காரணம் இருப்பதற்கு இல்லை என்றும் துணிந்து கூறிவிடலாம்.

(தொடரும்)

பௌத்த சமயம்

ஆங்கில மூலம் — டாக்டர் இராதாக்கிருஷ்ணன்
தமிழில் — இரா. வே நாராயணன், எம். ஏ.
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

கிறித்து பெருமான் பிறப்பதன்முன் 6 நூற்றுண்டுகளுக்கு முன்பிருந்த காலப் பகுதி, பல நாடுகளில் ஆன்மீகத் துறையில் நிலையின்மையும் அறிவுத்துறையில் பொங்குதலும் இருந்த காலமாகும். அப்பொழுது, சீன நாட்டில் லாட்சேயும், கன்பூசியசும், கிரேக்கத்தில் பர்மனடீசும் எம்பெடோகிலுசும், ஈரான் நாட்டில் ஜரதுஷ்டிரரும், இந்தியாவில் மகாவீரரும், புத்தரும் வாழ்ந்துவந்திருக்கிறார்கள். அந்தப் பருவ காலத்தில் அனேக தலைமையான ஆசிரியப் பெருமக்கள் தங்கள் பரம்பரைப் பெருமையின் அடிப்படையில் பாடுபட்டார்கள்; பல புதிய கருத்துத் திருப்பங்களைக் கொடுத்தார்கள்.

புத்தர் பெருமானின் வாழ்வில் வைகாசிப் பௌர்ணமி, மூன்று தலைமையான நிகழ்ச்சிகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ளது; பெருமானின் பிறப்பு, பெருமான் ஆனமை, பெருமானின் பரிநிர்வாணம் ஆகியவை இந்த நாட்களிலே நடந்துள்ளன. வைகாசிப் பௌர்ணமி, பவுத்த சமயத்தாருக்கு மிகத் தூய பெருநாளாகும். தேரவாத புத்த சமயத்தாரின் கருத்துப்படி, புத்தரின் பரிநிர்வாணம் கி. மு.544 வில் நடந்தது என்று கொள்ள வேண்டும்,

புத்தர் பெருமானின் வாழ்வில் நிகழ்ந்தவை அனைவரும் அறிந்தவை அவர், கபிலவஸ்துவின் வேந்தர் மகன்–இளவரசர்; செல்வச் சிறப்பிலே வளர்ந்தார்; யசோதரை என்ற இளவரசியை மணந்தார்; இராகுலன் என்ற மகனைப் பெற்

ரூர். உலகத்தின் துன்பங்களை அறியாதவராய் அரண்மனையில் வாழ்ந்தார். நான்கு முறைகள் வெளியுலகைக் கண்டார்: நரை மூதாளனைக் கண்டார், தமக்கும் அத்தன்மை வருமே என்றெண்ணினார். நோயாளனைக் கண்டார். தானும் உறு பிணிக்குரியவரே என்று உணர்ந்தார். ஏதில் பிணம் ஒன்று கண்டார். பிறந்தார் அனைவரும் பெறும் முடிவு அதுதான் என்று கண்டார். துறவியொருவரைக் கண்டார். நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம், மலையினும் மாணப் பெரிது என்ற எண்ணத்தை வளர்த்தார். எனவே, அந்தக் காட்சிகளால் பெருமானின் உள்ளத்தில், நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு இவற்றிலிருந்து விடுபட வேண்டுமெனும் வேட்கை எழுந்தது. பிறவிப் பெருங்கடல் நீந்துதல் கருதி கடவுளைக் கருதும் சிரமணன் நான் என்று அந்தத் துறவி வேந்தர் கூறினார்.

அபபழுக்கற்ற உடல், நிறைந்த நெஞ்சம், வாழ்க்கையின் வசதிகள் இல்லாதபோதும் நிறைவு ஆகியவை கொண்ட துறவியின் உருவமே, உய்யும் வழி, உயிர் நலம் பெறும்முறைகாணும் சமய வாழ்விலேதான் உளது என்று உணர்த்திற்று. அந்த நிலை, தற்காலிகத் தொந்திரவுகளையும் நிலையாத இன்ப நிகழ்ச்சிகளையும் நீக்கிவிடக் கூடியது. எனவே, நிலையற்ற உலகை நீத்து, நிலைத்த நிலைபெற விரும்பினார். வீடு நீங்கி, மனையாளை மறந்து, மகனைத் துறந்து, காவியணிந்து, கானகம் ஏகி, மன்னுயிர்தம் நோய் நாடி, நோய் முதல் நாடி, அது நீக்கும் வாய் நாடி வாய்ப்பச் செய்ய நினைந்தார். ஆறு ஆண்டுக் காலம் மிக நுணுக்கமான தத்துவ நீதிகளை ஆய்ந்தார்; மிகக் கொடுமையான நோன்புகளைக்கொண்டு வெறும்கூடானார். உடம்பார் அழிந்தால்தான் உயிரார் உயர்வர் என்று எண்ணினார். அவர் காண நினைந்த உண்மையை உணராமலேயே உயிர்க்கிறுதி

கொள்ளும் நிலையையும் அடைந்தார். எனவே, கடுந்திறல் நோன்பிகள் முறையை நீத்தார்; நடைமுறை வாழ்வையடைந்தார்; நிரஞ்சனை யாற்றின் நீர் அவருக்குத் தெளிவு தந்தது. அசோதைதந்த பாற்சோறு அவருக்குரிய உணவாக ஆயிற்று. உடல் நலமும் உளத் திண்மையும் பெற்றார். ஏழு வாரங்கள் ஆலமரத்தடியில் அமர்ந்து சிந்தனைசெய்தார். ஒரு நாள் உதய நேரத்தில், அகவிருள் பருகி, அறிவொளி எழுந்தது. அறிவுநிலை அடைந்த பின்னர் பெருமான், தன்னைப் பற்றிக் குறிப்பிடும் இடங்களில் ததாகதர் என்றே குறிப்பிடுவதைக் காணலாம்: உண்மை உணர்ந்தவர், தான் பெற்ற பெருநிலையைப் பேச வேண்டும் என்று எண்ணினார். காசி செல்வேன்; உலகிற்கு ஒளி விளக்கு ஆவேன். காசி நகர் காண்பேன்; அதிர்குரல் முரசம் முழங்கி, ஆழ்ந்திருக்கும் அறியாமையிலிருந்தும் மக்களை எழுப்புவேன். காசி செல்வேன்; அறம் பற்றிப்போதிப்பேன் என்றார். நாடெங்கணும் நடந்தார். உயர்ந்தோரும் தாழ்ந்தோரும், ஏழைகளும், இளவரசர்களும் அவரது சொல்லினால் உயர்வுகொண்ட மனிதர்களானார்கள். அவரது பேரறிவு நிலையினால் அனைவரும் ஆட்கொள்ளப்பட்டார்கள். அறத்தின் அழகை, துறவின் மகிழ்ச்சியை, எளிமையையும், பொதுமையையும் கொண்ட வாழ்க்கையை, நாற்பத்தைந்து ஆண்டுகளாக அறிவுறுத்திவந்தார்.

தமது எண்பதாம் ஆண்டிலே, குசிநாகரம் எனும் நகரிலே பரிநிர்வாணம் அடைந்தார். அழகு நிலையமாகிய வைசாலி நகரை நீங்கிச் செல்லும் அவர், தமது சீடர் ஆனந்தரோடு சென்றார். செல்லும் வழியில் ஒரு மலைப் பகுதியிலே தங்கினார். கோவில்களும், பள்ளிகளும், கவினுறு காட்சிகளும் கண்டார். ''கவினும் வளமும் கொண்ட நாடு, இன்பமும் நிறைவும் கொண்ட மனிதர்', (சித்ரம் ஜம்புத்துவீயம் மனோரமம் ஜீவிதம் மனுஸ்வா

னும்) என்று கூறினார். இரண்யவதி யாற்றின் கரையில் இரண்டு மரங்களுக்கிடையில் அணையொன்று தயாரா யிருந்தது. அழுது புலம்பும் நெஞ்சினேடு நின்ற ஆனந்த னைக் கண்டார். அழுகையோ, அவலமோ கூடாது. மனிதன் எதையெதை விரும்புகிருனே அதிலிருந்து விடுதலைபெற வேண்டும். பிறந்தார்கள், நிலையற்றவர்கள், இறவார்கள் என்று எண்ணுவதா? ஒரு வேளை தலைவனை இழந்துவிடு வோம் என்று எண்ணுகிருய்போலும். அது தவருனது கொடுக்கப்பட்ட கொள்கையே உன் தலைவன் என்று உரைத்தார். இவையே அவரது கடைசிச் சொற்கள். அத ேைடு அவரது உயிர் மோனத்தமைதியில் ஆழ்ந்தது. அவர் நிர்வாண நிலையடைந்தார்.

புத்த பெருமானின் வாழ்வில் இரண்டு பிரிவுகள் உண்டு. தனிமனிதன் பகுதி, சமுதாயப்பகுதி, அனைவர்க்கும் அறிமுகமான புத்தர் உருவம் துறவிக்கோலத்தில் உள்ளது. உள்ள நிறைவுகொண்ட, அமைதி தவழ்கின்ற, மோனத்தே மூழ்கிவிட்ட துறவியொருவரின் தோற்றத்தினைக்கொண் டது. இந்தநிலையே தேரவாத பவுத்த சமயத்துக்கும், அசோ கனின் தூதுகளுக்கும் அடிப்படையானது. இங்கு புத்தர் மனிதரேயன்றி, மாதேவரல்ல; ஆசானேயன்றி அவதார புருடரல்ல. மற்ெருரு புறமும் உண்டு மனிதர்களின் மன உளைச்சல்களை ஏற்றுக்கொண்டு, அவர்கள் வாழ்வில் நுழை யவிரும்பி, அவர்தம் குறை களைந்து, மன்பதை வாழ்வுக்குத் தன் செய்தி தரும் உளம்கொண்டு வாழ்ந்த நிலையாகும். (பகுஜன இதயா) இந்த மன்பதைப் பற்று காரணமாக வடஇந்தியாவை ஆண்ட குஷானர் காலத்திலும் குப்தர் காலத்திலும், (70-480), (320-650) இரண்டாவது கருத் துக் கூட்டம் தோன்றிற்று. அனைவர்க்கும் உயர்வு, கடமை யில் பற்று, உலகத் தொண்டுக்குரிய வழி ஆகியவற்றுக்கு

வழி காட்டிற்று. முதல் முறை, சிங்களத்தில், பர்வாவில், தாய்லாந்தில் பரவியுள்ளது. இரண்டாம் முறை, நேபாளத்தில், திபெத்தில், கொரியாவில், சீனத்தில், ஜப்பானில் காணப்படுகிறது.

எல்லா வகைப் பிரிவுகளும், புத்தரே சமயக் கணக்கர் என்பதனையும், ஆலின் அடியிலே அறிவொளி பெற்றார் என்பதனையும் இன்னாமை நிறைந்த நிலவுலகம் நீங்கி இன்னாமையில்லா உலகம் செல்லும் வழியைக் காட்டினார். சாவா மூவா உலகினை அடையும் நிலைவந்தால், அறிவுநிலை உலகினை அடையும்நிலை வந்துவிடும் என்பதனை ஒப்புக்கொள்கின்றன.

எல்லாச் சமயங்களின் அடிப்படையும், இயற்கையில் மனித மனத்தில் மாற்றம் ஏற்படுத்துவதேயாம். இரண்டாம் பிறவி என்னும் கொள்கை–துவித்யம்-ஜன்மா-இந்து பவுத்த சமயத்தினரின் மையக் கொள்கையாகும், மனிதன், ஒற்றை மனிதனல்ல; பல்வேறு நிலையினன் ஆவான். அவன் உறங்கும் நிலையில் இருக்கிறான்; யந்திரம் போலும் இருக்கிறான். உள்ளத்தளவில் ஒன்றோடு ஒன்று தொடர்பற்றுக் காணப்படுகின்றான். அவன் விழித்தெழ வேண்டியவன், ஒன்றுபட வேண்டியவன் அவனுள்ளேயே ஒருமை காண வேண்டும். விடுதலையும் கொண்டிட வேண்டும். கிரேக்கக் கதைகள் நமது இயற்கையில் ஏற்படும் மாற்றத்தைக் குறிப்பனவே. மனிதனே ஒரு தானிய மணி போன்றவன், 'தானியம் போன்றும் மடியலாம்; மணியினின்று தோன்றும் செடியினைப் போன்று மீண்டும் பிறப்பான் என்றே எண்ணியுள்ளனர். ஒரு அளவு தானிய மணிகள் இரண்டு முடிவுகளை அடையக்கூடலாம். முதலாவது: அரைத்து, மாவாக்கி ரொட்டியாக்கப்படுவது; இரண்டாவது: நிலத்திலே தெளிக்கப்பட்டு, முளைவிட்டு, செடியாக மாறி, பல்லாயிர

மணிகளை ஈன்று தரும் ஒருஅன்னை மணியாக ஆக்கிக்கொள் வது. இந்தக் கருத்தினைக்கொண்ட தூயபால் அவர்கள் மறு பிறப்புப் பற்றி (Resurrection) பின்வருமாறு கூறுகிறார்: ''அறிவற்றவனே, நீ விதைப்பது விரைந்து வளர வேண்டி யது அல்லது அழிந்து பட்டுவிட வேண்டியது.'' இயற்கை உடலை விதைக்கிறோம்; ஆன்மீக உடலை வளர்க்கிறோம். இந்த மாற்றம், பொருளின் மாற்றமாகவே மாறியமைந்து விடுகிறது. மனிதன் முழுமையான, இறுதியான பொருள் அல்ல. தன்னைத்தானே மாற்றிக்கொள்ளும் ஒரு பொருள் தான்; மீண்டும் பிறந்துகொள்ளும் தன்மை உடையவன். இந்த மாற்றத்தினைக் கொண்டுவருவதற்கு - மறுபிறப்புக்கு - விழித்தெழுவதற்கு - செய்யும் முயற்சியே பவுத்த மதத் தைப் போன்றே - எல்லா மதங்களின் - முடிவுமாகும்.

நமது காலத்திற்கு கட்டுப்படும் தன்மை, உலக வாழ் வில்கொள்ளும் ஈடுபாடு ஆகியவை அறியாமை - அவித்தை- காரணமாகவே வருகிறது. விருப்புக்கு வழிகோலிக்கொள் கிறோம். இழப்புக்கு வழிசெய்துகொள்கிறோம். அசவா-அறி யாமையும் ஆசையும் இவ்வுலக வாழ்வின் அடிப்படையில் அமைந்து கிடக்கின்றன. அறியாமையிலிருந்து (அவித்தை) அறிவுநிலைக்கும்(வித்தை), அறிவுத்தெளிவுநிலைக்கும் (போதி) வளர வேண்டியதாகிவிடும். நம்மிடத்தில் விபாசனை (கண்ட அறிவு தெளிந்த நிலை) வழியாக நாம் அழியாத அமைதியை (சமதையை) அடைகிறோம். இவற்றால் எல்லாம், வேதங் கள் கூறும் இந்த நிலைத்த தன்மையை - நேரடியான அறிவு, உடனடியான அனுபவம் ஆகியவற்றையே புத்தர் ஏற்றுக் கொண்டிருக்கிறார். உண்மையினை உணரும் அறிவு நிலைக்கு அவை துணையாகும் என்று கருதலாம் (வாத - பூத - நாண தசான்ண) என்று கூறலாம்.

ஒரு புதிய சமயத்தினைச் சொல்கிறேன் என்று புத்தர் கூறவில்லை. இந்துவாகவே பிறந்து வளர்ந்து இறந்தவர் புத்தர். பழமையான இந்திய நாகரிகத்தின் குறிக்கோள்களை புதிய வன்மையுடன் மீண்டும் தெரிவித்தார் என்றே சொல்லலாம். ''துறவிகளே, அனுபவஞானிகளால், விழித்தெழுந்த மக்களால் பின்பற்றப்பட்ட பாதையையே நானும் காண்கின்றேன். அந்தப் பாதை வழியாகச் செல்லும்போது நான் கண்டவற்றை அனைவர்க்கும் தெரிவித்தேன். இந்தப் பிரம்மகாரியம், வளமானது, வளரக்கூடியது, எங்கும் பரவியிருப்பது, எவரும் தெரிந்திருப்பது மக்களுக்குத் தெரிந்துள்ள, மக்களுக்கும் தேவர்க்கும் தெரிந்திருக்கும் ஒருமுறையாகும் என்பதை உணர்ந்து கொள்க'' என்றே கூறினார்.

சமய வாழ்வு சார்ந்த இந்தியாவின் குறிக்கோள் இணையற்ற பாதுகாப்பு, அச்சமற்ற தன்மை, மோட்சம், நிர்வாணம் ஆகியவையே. இவ்வுலக வாழ்வு தன்னிலிருந்து உயர்த்திக்கொள்வது, வாழ்வின் துன்பங்களையும், பொருள் முதல் துயர்களையும் துறந்து செல்வது, இருள்சேர் உலகில் இருந்து ஒளியும் ஆன்ம உணர்வும் நிரம்பிய உலகு செல்வது, மனிதனுக்கு இயற்கையானது. புத்தர் ஒரு புதிய ஆன்மீகநிலையினை (போதி) முழு ஒளித்தன்மையினை அடையும் முறை கூறினார். அதில் மிக உயர்ந்த நிலை-மூப்பு, அச்சம், பிணி, பிறப்பு, இறப்பு, கவலைகள் இல்லாத, செயல் துறந்த நிலையாகிய ஒன்றேயாகும்.

புத்தரின் ஆன்ம அனுபவத்தில் அச்சம், ஆசை, அவா ஆகியவை எல்லாம் நீங்கிய நிலை வரவேண்டும். அந்த நிலை உள்ளுணர்வு வழியான அமைதி நிலையாகும். ஆன்மீக உரிமைபெற்றுவிட்டோம் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அது அமைதல் வேண்டும். அனுபவம்பெற்றவர்களே, அதைப் பேசிட முடியும். அது ஒன்றும் தனித்த நிலையில்

உள்ள கடவுளர் உலகமல்ல. "வேறு கொள்கைகள் கொண்டவர்கள், அவ்வுலகைக் காண்பதற்காகவா, கடுந்துறவு கொள்கிறோம் என்று கேட்கும்போது நியாயமான தாழ்வுணர்ச்சியும், உயிர்ப்புணர்ச்சியும் தோன்ற வேண்டும்." வீடுபேறு (மோட்சம்) வேறு, பிரம்மஉலகம் வேறு என்று உபனிடதங்கள் பேசுகின்றன அல்லவா? அதனைப் போன்றுதான் புத்தரும் இறையவர் பதங்கள் முழுமையானவை அல்லவென்றும், அவையும் சில கட்டுப்பாடுகளுக்குள்ளடங்கியவை என்றும் பேசுகின்றார். உள்ளது என்னும்போதே இல்லது என்னும் ஒன்றும் காணப்படுகிறது. முழுமையானது என்னும்போது, அது உள்ளது இல்லது ஆகிய நிலைகளை எல்லாம் கடந்ததாக இருக்க முடியும். எனவே, இந்த முக்தி நிலை பிரம்ம நிலையைக் காட்டிலும் மேன்மையானது; அது காணவியலாதது. அந்தமில் இன்பந் தருவது, அழிவற்றது. கடவுளர் நிலையைக் காட்டினும் உயர்ந்த ஒன்று முழுமை. முழுமை நிலையைப் பற்றி உதானர் பின்வருமாறு பேசுகிறார். பிறப்பு அற்றது(அஜாதா) அழியாதது(அபூதா) ஆக்கப்படாதது (அகாதா) இணைப்பற்றது(அசங்கதா) இந்தப் பண்பு நிலையையே, உபனிடதங்கள் பேசுகின்றன. நாஇதி-நாஇதி, தைத்திரிய உபனிடதம். புத்தர், தம்மை (பிரம்மபூதா)பிரம்மா ஆகஆனவர்என்றும்கூறுவர். புத்தர் இந்த முழுமைக் கொள்கையினராகவே காணப்பட்டார். அவர், அனேகர் கடவுள் தங்களுக்காவன செய்வர் என்று கருதித் தம் கடமையினையும் செய்யாதிருப்பர் என்றுரைத்தனர். அவர்கள் ஆன்மீக அனுபவம் என்பதுவே உள்ளிருந்து கிளர்ந்தெழுவது என்பதை மறந்தவர்கள் என்று சொல்லாம் அல்லவா? ஏட்டுக் கல்வியாளர்கள், தாம் காணாத ஒன்றினைப் பற்றி கலைப் பொருள் பற்றிப் பேசுபவர் போலவே பேசத் தொடங்கிவிட்டார்கள்; கல்லாதவர்களோ மந்திர தந்திரமாதிய முறைகளால் கட்டுப்படுத்தப்படக் கூடியது

என்று நடைமுறைக்குக் கொண்டுவந்துவிட்டார்கள். பரம் பொருள், நம்மை மன்னித்துவிடும் என்றால் நாம் எப்படியும் வாழ்ந்துகொள்ளலாம் அல்லவா? இந்த அறியாமையையும் நம்பிக்கைகளையும், அச்சத்தையும் பயங்கரத்தையும் அடிப்படையாகக்கொண்ட சமயவாதத்தை எதிர்த்தார். மேலும், சமயங்கள் மக்கள் மனத்தில் கொள்கையுணர்ச்சியையும், பொறுமையின்மையையும் ஊட்டிவிடுகின்றன. கொள்கை வடிவான பழமை, உலகிலே அமைதியின்மை' அநீதி, பூசல், குற்றம், வெறுப்பு ஆகியவற்றைக்கொண்டு நிலவியுள்ளது.

இந்தியாவின் தத்துவ அமைப்புக்கள் அனைத்துமே. உலகினை, சம்சாரம் — முடிவற்ற நீண்ட நீர்வழி — அதில் மனிதனின் வினை — கருமம் — தொழிற்படுகிறது என்பதனை ஏற்றுக்கொள்கின்றன. (இந்து; சமணம்; சீக்கி; பவுத்தம்) எதுவுமே நிலையானது அல்ல, கடவுளர் உட்பட இறப்பும்கூட நிலையானது அல்ல, நிம்மதி தருவதும் அல்ல; இறப்பினைத் தொடர்ந்து புதிய வாழ்வும் வளர்ச்சியும் கொள்கின்றன. ஒரு தனி மனிதனின் ஒரு பிறவி ஒழுங்கு முறைகள், அவனது பிற முறைகளை எல்லாம் உருவாக்க முடியாது. புத்தருக்கு அனைத்தும் துறந்துவிட வேண்டும் என்ற கொள்கையிலும் நம்பிக்கையில்லை. மனிதனின் எதிர்காலம் மனிதனின் கையில் இல்லை என்று புத்தர் பெருமான் சொல்லவில்லை. எதிர்காலத்தை அவன் படைத்துக்கொள்ளலாம். அருகதனாகலாம்; நிர்வாணமடையலாம். கடுமையான வாழ்வினைப் போதிக்கும் பெருமானாகவே புத்தர் பேசிவந்துள்ளார். நமது எண்ணமே, காலத்தை வென்று நிற்பதேயாம்; சம்சார பந்தத்தினை கடத்தல் வேண்டும்; அதற்குரிய வழிகள் கட்டுப்பாடும் ஒழுக்கமும் நிறைந்த வாழ்க்கையே ஒளி நிறைந்த நிலைக்குக்கொண்டு செல்லும்.

நல்ல நினைவு, நல்ல செயல் ஆகியவை காரணமாகவே இந்த நிலையிலிருந்து அந்த நிலை அடைய முடியும் என்று ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அவ்வாருன அமைப்பினை உரைக்க வேண்டியவரானுர். வினை — கருமா — என்பது காண்கின்ற உலகைப் பற்றி, வாழ்வினைப் பற்றி, காலக் கணக்கைப் பற்றி தொடர்ந்து கூறிற்று; நிர்வாணம் மனிதனின் மனத்தூய்மையை, உள்ளுணர்வை உணர்ந்து பேசியது. நாம் வாழும் வாழ்க்கைநிலையில் இருந்து நம்மால் ஒதுங்கி நிற்கவியலும். வெற்றுவெளியை உணர்கின்ருேம். உலகினைக் கடந்த, செல்லவியலாத அந்த நிலையை நாம் அடைகிருேம். இவ்வாருன, புறவாழ்விலிருந்து விலகித் தனித்து நிற்பதற்கு, தனிப்பட்ட மனிதர்களுக்கு தன்னையே சிலுவையில் அறைந்துகொள்ளக்கூடிய எண்ணம் இருக்க வேண்டும்; உணர்வையும் உடலையும் அழித்துக்கொள்ளும் ஆற்றல் இருக்க வேண்டும். மாறுதலுக்குட்பட்டிருக்கும் புறவாழ்க்கையைப் பற்றிய இயற்கையாக நீக்கவுணர்ச்சி தோன்றி இருக்க வேண்டும். மரணனந்தம் வறி ஜீவிதம். வளையாத கலக்கத்தின் அடிப்படையிலிருந்து அழுகின்ருேம். (மிருத்யோர் மா அம்ருதம் காமாய) இந்தச் சாவிலிருந்து இந்த உடலைக் காப்பாற்றக் கூடியவர்கள் யார்? சாவே முடிவல்ல என்ருல், சூனியமே அனைத்துமல்ல என்ருல், அனைத்தையும் கடந்து நிற்கும் அந்த ஒரு பொருள் எது? அதனைப் பேச முடிந்தாலும் முடியாவிட்டாலும் அதனைப் பற்றி எண்ண வேண்டியதாகத்தானே உள்ளது. அந்த "நான்" என்பது உடலுடனே, உணர்ச்சியுடனே, காட்சிகளுடனே, அமைப்புக்களுடனே, எண்ணத்துடனே தொடர்புடையதல்ல; ஏனெனில் இவையெல்லாம் நிலைத்த தன்மை பெருதவை, மாறுதலுக்குட்பட்டவை, பொருளற்றவை. எப்பொழுது ஒருவன், நிலையாத ஒன்று துன்பம் தருவது என்று எண்ணுகிருனே, அப்போது அவன் அவற்றி

லிருந்து பற்றறுத்த வாழ்வு பெறுகிருன்; விடுதலை அடை கிருன். தவிர்க்கவியலாத சில முன்னேற்பாடுகள், இந்த உயர்நிலை உள்ளத்திற்குக் காரணமாகின்ற (அத்தேவா அத்தேனியன) இந்த அடிப்படையான இன்றியமையாத நான் தான், கட்டுப்படுத்தப்படாத நிலை காரணமாக, உரிமையையும் ஆற்றலையும் பெறுகிறது. இந்த நான் என்பது உடலோ உணர்வோ, உள்ளமோ அல்ல. இப்படிக் கூறிவிடுவதனுல் எதுவுமே இல்லை என்று கூறிவிடுவதாகப் பொருளல்ல. அகங்காரம் மட்டுமே, இந்த நாளின் அடிப்படை என்று சொல்லிவிட வியலாது; ஆனுல் அது மட்டும்தான் புறத்தோற்றத்துக்குரியது. நிர்வாணத்தை அடைதற்குரிய மற்ருரு மூறையும் பகுதியும் உண்டு, புத்தர்பெருமான் விழிப்போடிருத்தல் வேண்டும், வழி வேறு காண்க என்கின்ற போது, அவர் குறிப்பது எல்லாம் நடைமுறை நிகழ்ச்சிகளில் மூழ்கிப்போய்விடாத அடிப்படைக் கொள்கையை மட்டுமே கூறினுர் எனலாம்; அது மட்டுந்தான் சமுதாயத்தின் சிக்கல்களைக்கண்டு அமிழ்ந்து போவதல்ல. மனிதனுடைய ஒரு கருத்துக்காக அடிமையாகாமல் ஆனுல் தன் உரிமைகளைக் காத்துக்கொள்ளப் பாடுபடும் ஒருவகை உள்ளது. விடுதலைபெற்றவர்கள், விடுதலைபெற்றவர்கள் ஏனென்ருல் கட்டுக்களையெல்லாம் கடந்தவர்கள். துறவி என்ருலே தன்னைத்தானே வென்றுகொண்டவன் — தன் ஆற்றலுக்குள் தன் இதயத்தை அடக்குவைத்திருக்கிறவன், மனத்தின் ஆற்றலுக்குள்ளடங்கியவன் அல்ல. புத்தர் நிர்வாணம் அடைந்தபோது, தன்னிலைவிட்டு நீங்கிய ஒருவாராக அவர் ஆகிவிடவில்லை. அவர் அழிந்துபட்டு அருவமாகிவிட்டார் என்பதல்ல; தன் உணர்ச்சிகளையும் ஆசைகளையும் அழித்துக் கொள்வது என்பதுதான் அதற்குப் பொருள். அந்த மனிதன், தவருன கருத்துக்களையும், தனிப்பட்ட ஆசைகளையும் கொண்டு மனித வாழ்வை உருவாக்கிக்கொள்ளப் பார்க்

கிறேமே. அவற்றிலிருந்தெல்லாம் அவன் விடுதலைபெறு கிறன். தனிப்பட்ட மனிதனை உருவாக்கும் பண்புகள் எல்லாவற்றிலிருந்தும் தான் விடுதலைபெற்றுவிட்டதாகவே புத்தர் கருதுகின்றார். இரட்டைவித வாழ்க்கையிலிருந்து முற்றிலும் நீங்கிவிட்டிருக்கிறார். "எதை விரும்புகிறனே, அதை நினைக்கிறன்; எதை விரும்பவில்லையோ அதை நினைப்பதில்லை". புத்தர் இந்த நினைவைப் பின்பற்ற வேண்டும்; அருளை கருணையை வாழ்வில் கைக்கொண்டொழுக வேண்டும். நம்மை மதிப்பீடு செய்வது, நாம் போதிக்கும் கொள்கைகளோ, அணிந்திருக்கும் அடையாளங்களோ, நாம் கூறும் மொழிகளோ அல்ல; நமது தியாகப் பணியும் உறவார்ந்த உள்ளமும்தான் அவற்றுக்குக் காரணமாக அமைகின்றன மனிதன் இயற்கையிலே வன்மையற்றவன்; எனவேதான், நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு ஆகியவற்றுக்கு உட்பட்ட மனிதன் அறியாமையாலும் அகங்காரத்தாலும் பிணியாளர்களை, வயதானவர்களை, இறந்தவர்களைக் குறை கூறுகின்றன். தன் உடன்வாழ்வோரை, எள்ளிநகையாடுபவன் தனக்குத்தானே அநீதி யிழைத்துக்கொள்கிறன். நமக்கு முன்னுல் செல்லும் மனிதன் நொண்டிக்கொண்டு செல்வதனையோ, தட்டுத்தடுமாறி வீழ்வதனையோ குறைகூறுவது கூடாது; ஏனெனில் அவன் அணிந்துள்ள காலணிகளைப் பற்றியோ, சுமக்கும் பளுவைப் பற்றியோ தெரியாமல் இருக்கக்கூடும் அல்லவா? நோய் என்றல் என்ன என்பதை உணர்ந்துகொண்டால் வருந்துவோர் அனைவரையும் நாம் உறவினர்களாக ஏற்றுக்கொள்ளாமல் இருக்கமுடியுமா?

IV

பவுத்த சமயம், புதிய தனித்த சமயமாகத் தொடங்கப்படவில்லை. இந்து சமயத்தின் ஒரு பிரிவாகவோ, கொள்கை

யாகவோ தோன்றி நின்றது என்றுதான் சொல்லவேண்டும். தத்துவ ரீதியாகவும் கொள்கை முறையிலும் அடிப்படைகளை ஏற்றுக்கொண்ட புத்தர், அவர் காலத்திலிருந்த சில பழைய வழக்கங்களை எதிர்த்தார். வேத காலத்து சடங்கு முறைகளை மட்டும் ஏற்றுக்கொண்டு அடங்கிப் போகவில்லை. சில சடங்குகளைச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டபோது, 11 தர்மத்தைக் காப்பதற்காக என்னுடைய குடும்பத்தில் உள்ள வழக்கமான சடங்குகளைச் செய்யவேண்டும்; அதன் காரணமாக நற்பயன் விளையும் என்று சொன்னால்கூட அதற்காக, பலியிட்டுச் சில சடங்குகளைச் செய்ய விரும்பவில்லை; ஏனென்றால், பிறபொருள்களின் துன்பங்களின் மீது கட்டப்படும் இன்பம் எதனையும் நான் பொருட்படுத்துவதில்லை.

உபனிடதங்கள்கூட, ஆன்மிக சமயத்தையே பலியிடல் முதலிய சடங்கு முறையைக் காட்டினும் மேன்மைப்படுத்திக் கூறுகின்றன; ஆனால் புத்தர் பெருமானைப் போல, அவை அவற்றைக் கடுமையாகக் குறைத்துக் கூறித் தாக்கவில்லை. புத்தருடைய தலைமையான கொள்கையே, சமய சம்பிரதாயங்களில் மாறுதல் ஏற்படுத்த வேண்டும்; அடிப்படைக் கருத்துக்களையே கொண்டொழுக வேண்டும் என்பதுதான். இந்து சமயத்தின் அடிப்படைச் சட்டத்தைக் கைக்கொண்டொழுகுபவர்களும், விடுதலையுணர்வுகொண்டு எழுந்த உள்ளங்களின் வழிநிற்பவர்களும் அவதார புருடர்கள் எனப்பட்டனர். இந்துக்களின் ஒரு அடிப்படையான நம்பிக்கை, கடவுட்தன்மை—திருமால்-பலவேறு வடிவங்களைக் கொண்டு இருந்தது, மனித இனத்தின் பலவேறு குறைகளைக் களைந்து நிற்பதற்காகவே என்பதாகும். எனவேதான், புத்தர் பெருமானையே ஒரு அவதார புருடராக ஏற்றுக்கொண்டனர். இந்து சமயத்திலுள்ளே மெது

வாக நுழைந்துவிட்ட பலவேறு குறைகளைக் களைந்தவர் அவர்; அவர்களது தவருன சடங்குகளிலிருந்தும், முறை யற்ற பழக்கங்களிலிருந்தும் காத்துநின்ற கடவுள் நிலையினர் என்பதனுலேயே அவ்வாறு பாராட்டத் தொடங்கினர். இந்த அவதாரக் கொள்கை, நமது முன்னேர்களிடம் நமக் குள்ள நம்பிக்கையைக் காத்துக்கொள்ளவும், அதிலே வேண்டும் மாற்றங்களைக் கொடுத்துக் கொள்ளவும் துணை செய்கிறது நமது புராணங்கள் புத்தர் பெருமானை 9-வது அவதாரமாகக் குறிக்கின்றன.

ஜெயதேவரின் அஷ்டபதியில் (கீதகோவிந்தம்) திருமா லின் பல்வேறு அவதாரங்களும் குறிக்கப்படுகின்றன; புத்தர் பெருமானும் அதில் குறிக்கப்படுகின்ருர்:–

> கேசவமூர்த்தியே, பல்லாண்டு. ஓங்கியுலகளந்தவனே பல்லாண்டு. வேதங்களில் சொல்லப்பட்ட ஆனின பலியினை அன்புள்ளங்கனிந்து அறம்மல்லெனத் துறந் தாய் புத்தனுகி நின்ருய் பல்லாண்டு

என்கின்ருர். உரையாசிரியப் பெருமக்கள், "புத்தர் பெரு மான் சுருதி முழுவதனையும் எதிர்க்கவில்லை; ஆனுல் பலியிடு தலைக் கூறும் பகுதியை மட்டுமே எதிர்த்தார்" என்று கூறுவர். ஜெயதேவர் பத்து அவதாரங்களையும் அடுத்த பாடலில் குறிக்கின்ருர்:-

> வேதத்தைக் கொடுத்தானே கோமகநின்கழல் போற்றி
> குவலயத்தைக் காத்தாய் கழலிணை போற்றி
> குவலயத்தைக் கொடுத்தானே போற்றி போற்றி
> அரக்கர் மாளச் செய்தானே போற்றி போற்றி
> அருளாசை மிகும் பலியினையும் மாற்றினுனே போற்றி
> அரசர்தம் திறல்தனை வென்று நின்ருய் போற்றி
> இலங்கையர்கோன் மணிமுடி வீழ்த்தினேனைப்போற்றி

வாலிழை மேனி வன்னியோனே போற்றி போற்றி
அறவாழி அந்தண னாகிநின்றானே போற்றி
அனைத்துயிர்க்கும் அன்புதந்தானே போற்றி போற்றி

இந்து சமயப் பழமையினையே, அதனுடைய கருத்துக்களிலே மாற்றம் உண்டாக்குவதற்குரிய பொருளாக ஆக்கிக்கொண்டார். அவர் அழிவுக்குரியவராக வரவில்லை; ஆக்குபவராகவே வந்தார். இந்த நாட்டில், நமக்கு, நமது சமய சம்பிரதாயங்களின் மிகமிகச் சிறந்த சார்பினராகவே குறிக்கப்படுவார். தன்னுடைய வழிமுறைகளை இந்த நாட்டின் மண்ணிலே பதித்துச் சென்றார். இந்த நாட்டின் ஆன்மாவின் மீது, அவற்றின் கொள்கை கோட்பாடுகளின் மீது அழியாத சின்னத்தைப் பொறித்துச் சென்றுள்ளார். வெளிநாடுகளில் அந்தந்த நாடுகளின் மரபுகளுக்குத் தக்கபடி தனித்த வேறுவகையான வடிவங்களைப் புத்தபெருமானின் போதனைகள் பெற்றுவிட்டன; ஆனால் இந்த நாட்டில், அவரது தாயகத்தில், அவையெல்லாம் இந்த நாட்டு நாகரிகத்தினுள்ளே நுழைந்தன. அதன் இணைந்த பகுதியாகவே ஆகிவிட்டன. பிராமணங்களும் சிராமணங்களும் ஒன்று போலவே அவரால் கருதப்பட்டன; இரண்டு வழிகளும் ஒன்றாகவே இணைந்து நின்றன. ஒருமுறையில் புதிய இந்திய சமயத்தினைப் படைத்தவர் புத்தரே எனலாம்.

ஒவ்வொரு சமயமும் மனித இனம் ஆனது, பல்வேறு முயற்சிகளுக்குப் பிறகு, தன்னைத்தானே சீரமைத்துக் கொள்கிறது; தன்னுடைய வாழ்வின் பயனை ஒரேயொரு மனிதரை முன்னிறுத்திக் கருதுகிறது; பிறகு தன்னைத் தானே அந்தப் பிரளய நிலையில் மூழ்கடித்துக்கொள்கிறது. புத்தபெருமான், விடுதலைபெற்ற புதியவகை மனிதனை உருவாக்க வேண்டும் என்று முயன்றார்.

[தொடரும்]

மதிப்புரை

கோயில் மாநகர்

[நூல்: கோயில் மாநகர். ஆசிரியர்: கி. பழநியப்பன்.
கிடைக்குமிடம்: 48, மேலமாசி வீதி, மதுரை-1;
திருப்பணிக்குழு, தெற்காடிவீதி, மதுரை-1
விலை: 5 ரு.]

வரலாற்றுப் புகழ் மிக்க நிகழ்ச்சியொன்று சமீபத்தில் மாமதுரையில் நடைபெற்றதை நாடு அறியும். அதுவே மீனுட்சியம்மன் கோயிலின் மாபெரும் திருப்பணியாகும். அக்கோயிலின் தோற்றத்தை ஆராயும்போது அது எப்பொழுது யாரால் கட்டப்பட்டதென்றும் அதன் வளர்ச்சியைப் பற்றியும் தெளிவான வரலாறு தமிழகத்திற்கு இதுவரை கிடைக்காமலிருந்தது. அக்குறையினை நீக்கும் முகத்தான் திருப்பணிக் குழுவினரால் வெளியிடப்பெற்ற 'கோயில் மாநகர்' என்னும் நூல் அக்குறையினை நிறைவு செய்கிறது. இந்நூலாசிரியர் திரு. கி. பழநியப்பன் அவர்கள் பல ஆண்டுக் காலமாக சேகரித்த குறிப்புக்களையும், கல்வெட்டுச் செய்திகளையும், பட்டயச் சான்றுகளையும், கோயில் தல வரலாறுகளையும், புராண நிகழ்ச்சிகளையும் வைத்து இந்நூலை தெளிவுபட எழுதியுள்ளார்கள். எவ்வித உண்மை நிகழ்ச்சிகளையும் விடுபடாமல், கிடைத்த சான்றுகளை வைத்து நூலினை அவர்கள் எழுதியிருப்பது பாராட்டப்பட வேண்டிய ஒன்ருகும். நூலினை தென்னகத்துத் திருக்கோயில்களின் தோற்றமும் வளர்ச்சியும், பாண்டியநாட்டு அரசியல் வரலாறு, புராண வரலாறு, பிற்காலத்தில் நிகழ்ந்த சில அற்புதங்கள், மதுரைத் திருக்கோயில் தோற்றமும் வளர்ச்சியும், திருப்பணி விவரம், திருப்பணி செய்வித்தோர் வரலாறு, ஆலய அமைப்பின் அழகும் சிறப்பும், ஆலய ஆட்சி வரலாறு, மாபெரும் திருப்பணி, பிற்சேர்க்கை என்னும் பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு அவ்வத் தலைப்புக்களில் எவ்விதக் குறையுமின்றி எளிய, இனிய தமிழ் நடையில் விளக்கி யிருக்கிருர்கள். இருபதிற்கு மேற்பட்ட நிழற் படங்களும் இணைக்கப்பட்டு நூல் பொலிவினைப் பெறுகிறது. இனி வரலாறு எழுதுவோர்க்கு இந்நூல் முதல் நூலாக இருக்குமென்பதில் எவ்வித ஐயமுமில்லை. இக்கருத்துக் கருவூலத்தை நீங்களும் படித்து இன்புறுங்கள்.

புலவர். மு. உலகநாதன்

I. சங்க வெளியீடு

			ரூ.	அ.	பை.
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக் கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கணநூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாக யோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சன தீபிகை	—	0	12	0
18.	இயற்கைப் பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப் பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பக மூலமும் உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினு விடை	—	0	1	0
25.	கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகை திருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானாமிர்தக் கட்டளை	—	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	—	0	8	0
33.	உவமான சங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

0.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6
42.	அகராதி நிகண்டு	—	0	12
43.	மேகவிடு தூது	—	0	2
44.	திருக்குற்றாலமாலை	—	0	2
45.	தண்டலையார் சதகம்	—	0	4
46.	இராமோதந்தம்	—	0	3
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6
49.	கூடற்புராணம்	—	0	10
50.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6
51.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4
52.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12
53.	பாப்பாவினம்	—	0	10
54.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5
55.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3
56.	கடம்பர் கோயில் உலா	—	0	6
57.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6
58.	கலைசைக்கோவை	—	0	12
59.	பெருந்தொகை	—	5	0
60.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5
61.	சிராமலைக்கோவை	—	0	12
62.	மத்யவியாயோகம்	—	0	2
63.	அமிர்தரஞ்ஜநி	—	0	2
64.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8
65.	திருச்சிறுபுலியூருலா	—	0	12
66.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10
67.	மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர்	—	2	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.
2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபாய் ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக் கொடுக்கப்படும்.

இவ்விதழ், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள். திரு. பி. டி. இராசன் (B. A. Bar-at-law.) அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.